2022 மார்ச் 24] [திரு. எ.வ. வேலு]

கொண்டிருக்கிறோம். அப்படி ஓர் ஆய்வுக் கூட்டத்தில் நாங்களும் பல்வேறு கருத்துகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் சொன்னோம். அதாவது, ஒரு விபத்து ஏற்படுகின்றபோது ஒருவர் இறந்து விடுகிறார் அல்லது இறக்கின்ற நிலையில் உள்ளார் அல்லது விபத்தில் கை உடைகிறது அல்லது கால் உடைகிறது அல்லது மண்டை உடைந்து இரத்தம் வழிந்துகொண்டே இருக்கிறது என்றால் இப்படிப்பட்ட நிலையிலே அவர் வெளிநாட்டுக்காரராக இருக்கலாம்; வெளி மாவட்டத்துக்காரராக இருக்கலாம்; வெளி மாநிலத்துக்காரராக இருக்கலாம்; ஆனால், அப்படிப்பட்டவர்களுக்கு தமிழ்நாட்டிலே விபத்து ஏற்படுகிறபோது ஏதாவது உதவ வேண்டுமென்ற கருத்தை வெளியிட்டதனுடைய விளைவாக மறுநாளே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஈர நெஞ்சத்தின் வெளிப்பாடாகத்தான் இன்றைக்கு 'நம்மைக் காக்கும் 48' என்கிற திட்டம் வந்திருக்கிறது. அப்படிப்பட்ட சிறப்பான திட்டங்கள், ஆலோசனைகளை எல்லாம் எங்கள் துறைக்கு வழங்கிக் கொண்டிருக்கிற அடிப்படையில்தான், இன்றைக்கு மத்திய அமைச்சராக இருக்கிற மாண்புமிகு திரு. நிதின் கட்காரி அவர்கள் பாராட்டுகின்ற அளவுக்கு இந்தத் துறை சிறப்பாகச் செயல்படுகின்றது என்பதை நான் மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10—10

3. நகைக் கடன் தள்ளுபடி—விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகைக் கடன் தள்ளுபடியில் நேற்று ஒருநாள் மட்டும் 1,000 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) கிட்டத்தட்ட இதுவரை 5 இலட்சத்து 48,000 கடன்களுக்கு தள்ளுபடி இரசீதும், நகைகளும் இந்த 3 நாட்களுக்குள்ளாக வழங்கப்பட்டிருக்கின்றன. நான் 31 ஆம் தேதி அன்று முடியுமென்று சொன்னேன். தற்போது கண்டிப்பாக 31 ஆம் தேதிக்கு முன்பாகவே 28 ஆம் தேதியே முடியுமென்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆகவே, தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*